சிவமயம்

REGISTERED AS A NEWSPAPER IN CEYLON
P. M. G. No. H. A. 19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு கார்த்திகை மீ கஎ உ (1947 டிசெம்பர் 2 செவ்வாய்க்கிழமை) [ இல கூரு

## பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

தலையொரு பந்துந் தடக்கையை திரட்டி தானுடை யரக்கனெண் கயிலை
அலைவது செய்த வவனறிறல் கெடுத்த வாதியான் னுறைவிடம் வினவில்
மலையென வோங்கு மாளிகை நிலவு மாமதின் மாற்றல ரென்றும்
உலவுபல் புகழார் ஓமமாம் புலியூர் உடையவர் வடதளி யதுவே.

—சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## கொடிப் பிரச்சினை

### அதன் அந்தரங்க நோக்கம்

இன்று கொடிப்பிரச்சினை மிகவும் பெரிதாக இந்த இலங்கையில் இருக்கிறது. இலங்கையின் தேசியக் கொடியாக சிங்கக்கொடியை ஆரோகணிப்பதா? அன்று? என்ற இந்தப் பிரச்சினையை ஐக்கியதேசியக் கட்சியினர் வேண்டுமென்று கிளப்பிவிட்டிருக்கின்றார்கள் என்று சமசமாஜிக் கட்சிச் சார்பாக இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்தவராயுள்ள மிஸ்ரர் டபிள்யூ. தகநாயக்கா சென்றவாரம் காலிநகரசபையிற் கூறினார்.

இலங்கையின் தேசியக்கொடியாக வாளேந்திய சிங்கக் கொடியையே ஆரோகணிக்கவேண்டும் என்று ஷை நகரசபையில் ஒருவர் கொண்டுவந்த பிரேரணைக்குத் திருத்தப் பிரேரணை எடுத்தாளும்முகத்தாலேயேமிஸ்ரர் தகநாயக்கா மேற்கண்டவாறு கூறினார். மிஸ்ரர் தகநாயக்கா மேலும் கூறியதாவது:

"இன்று கொடிப் பிரச்சினை அவ்வளவு பிரதானமானதல்ல. நாட்டின் நன்மைக்கு வேண்டிய பல பிரச்சினைகள் உண்டு. இவற்றைச் சனங்கள் மறக்கச் செய்வதற்கே, இன்று அதிகாரம் வகிக்கும் கட்சியினர் இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கின்றார்கள் இலங்கைப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள்சபை, இக்கொடி விஷயமாக ஆராய்ந்து ஓர் முடிவு செய்ய வேண்டும்."

மிஸ்ரர் தகநாயக்காவின் திருத்தப் பிரேரணைதான் ஈற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 6 மாதச் சிறை

### சோரமாக நெல் கொண்டுவந்தாராம்

இலங்கை அரசாங்கத்திலே, புகைரதஸ்தானத் தலைவராயிருந்து இளைப்பாறியுள்ள ஸ்ரீ பீ, எஸ். பஸ்தியாம்பிள்ளை என்பவர் கல்கமத்திலிருந்து 45 புசல் நெல்லை உத்தரவில்லாமல் சோரமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்தார் என்று யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் குற்றஞ் சாட்டப்பட்டார்.

விசாரணை முடிவில், நீதிபதி மிஸ்ரர் எம். எம். மஹ்றூப் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு 6 மாசக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## இலங்கையில் பிரிட்டிஷார்

### அவர்களின் எதிர்காலம் என்னகும்?

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தாம் சுயராச்சியம் வழங்கப்பட இருக்கிறது. ஆகவே, இதுவரை இலங்கையின் பெரிய தொழில்களில் தம் முதலை முடக்கிவைத்த பெரிய லண்டன் முதலாளிமார், இனித் தம் கதியென்ன என்று ஏங்குகிறார்களாம். இந்தத் தொழில்களை எல்லாம், இலங்கைச் சுதந்திர அரசாங்கம் தன்வசமாக்கி அத்தொழிலில் ஈடுபட்டுள்ள முதலாளிமார்க்குச் சீட்டுக் கொடுத்துவிடுமோ என்றும் லண்டன் வர்த்தக வட்டாரங்களில் அஞ்சப்படுகிறது.

பிரிட்டிஷ் முதலாளிகள் அப்படியான பீதியடையவேண்டியதேயில்லை என்று லண்டன் "பினன்ஷியல் ரைம்ஸ்" பத்திரிகையின் இலங்கை நிருபர் அப்பத்திரிகைக்குத் தெரிவிக்கின்றார்.

"பிரிட்டிஷார் இலங்கையுடன் கொண்டிருக்கும் வர்த்தக உறவை நீக்க வேண்டும், அல்லது அவர்களுடைய தொழில்களைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணம் இலங்கைக்கிடையாது. ஆனால் இலங்கையின் பொருளாதார நிலைமை வருங்காலத்தில் என்னமாதிரி இருக்கும் என்பதை இப்போது சொல்லமுடியாது. இலங்கையின் அரசாங்கத்தை நடத்தும் செலவு கண்டபடி மலைபோல் ஏறிக்கொண்டே போகிறது. அதுமாத்திரமல்ல, இலங்கையின் சமூக சேவைகளுக்கான செலவும் வரவர அதிகரிக்கும். இதனைப் பிரிட்டிஷ்முதலாளிமார் இப்போது சிந்தித்துக்கொள்ளுதல் நலம்." என்று "பினன்ஷியல்ரைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது;

மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது:

"இலங்கை இங்கிலாந்துடன் கொண்டிருக்கும் நேசபான்மை சமீபகாலத்து நிகழ்ச்சிகளினால் மிகவும் அதிகரித்திருக்கிறது. ஆனால் அந்த நேசபான்மைக்கு விரோதமாகச் சமதர்மிகள் வசையாரிபொழிகின்றனர்தான். இப்படி அவர்கள் வசைமாரி பொழிந்த போதிலும் இந்தச் சமதர்மிகள் இலங்கை மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்லர்."

## "தாயான ஈசன்"

### (திருமதி புஷ்பம் நடராஜன் அவர்கள்)

தாயன்புபோல் தன்னல மற்றதும் புனிதமானதும் உலகில் வேறொன்றில்லை, தாயே அன்பிற்கும்கருணைக்கும் பொறுமைக்கும் சகிப்பிற்கும் எடுத்துக்காட்டு. அன்னையின் பெருமைக்கு அளவில்லை. ஆகவே நாம் பிறந்த நாட்டையும் நாம்பேசும் மொழியையும் தாய்நாடு, தாய்மொழி என்று சிறப்பாகக் கூறிக்கொள்கிறோம். உலகிற்கு முதல்வனாகிய கடவுளையும் தாயாக வழிபடுகிறோம்.

குழந்தை தனக்கு வேண்டிய பொருளைத் தாயிடம் கேட்டு எளிதாகப் பெற்றுக்கொள்கிறது. வியாதியாலோ துன்பத்தாலோ துயருறும்போது நமது வாய் நம்மையறியாமலே அலமருகிறது, பக்தர்கள் இறைவனை அம்மையே! அன்னையே! தாயே! என்று கூவியழைக்கிறார்கள். தாய் தன் குழந்தைகளின் துன்பத்தைத் துடைக்க விரைந்து ஓடிவருகிறாள் அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச்செய்வதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கிறாள்

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பல இடங்களில் சிவபெருமானைத் தாயாகவும் (தன்னை நாயாகவும் நினைந்து) பாடுகிறார். முதலில் சிவபுராணத்திலேயே "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற்சிறந்த தயாவான தத்துவனே" என்று கூறியுள்ளார். இங்ஙனம் அவர் இறைவனைத் தாயாக்கொள்ளக் காரணம் என்ன என்பதனை ஆராய்வோம்.

தாயானவள் தனது குழந்தைக்கு வேளாவேளைக்குப் பாலூட்டிச் சீராட்டிப் பாராட்டிக் கருத்துடன் வளர்க்கிறாள். குழந்தைநோயுற்றால் தானே மருந்துண்டு பத்தியம் காக்கிறாள். குழந்தைக்கு முதல் ஆசிரியையாக இருந்து குழந்தை பேசவும் மெள்ள மெள்ள உலக விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும் கற்பிக்கிறாள தனது குழந்தை எதிர்காலத்தில் சிறப்புடன் விளங்குவதற்குத் தாயே காரணமாகிறாள்.

ஆனால் தாய்மார்கள் ஒரே தன்மை உடையவர்களல்ல. இந்தியாவில் குழந்தை மரணவிகிதம் அதிகமாயிருப்பதற்குத் தாய்மார்களே காரணமென்றால் தவறில்லை. பல அன்னைமார்கள் அறியாமையினாலே குழந்தை அழும்போதெல்லாம் பால் கொடுத்தும், தொந்தரவு செய்யும் போதெல்லாம் உடம்பிற்கு ஒவ்வாத பண்டங்களை வாங்கிக்கொடுத்தும் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே எமனாகிவிடுகிறார்கள்.

பச்சிளங் குழந்தைகளுக்கு தாய்ப்பாலே சிறந்த ஆகாரம். ஆனால் சில நாகரீக மங்கையர்கள் குழந்தைகளுக்குப் பால் ஊட்டுவது நாகரீகமல்ல என்று தவறுதலாகக் கருதித் தாய்ப்பாலை மறக்கடித்துவிடுகிறார்கள். அதனால் பல குழந்தைகள் சவலையாகி வியாதியுற்று நொந்து மடிகின்றன.

ஆனால் உத்தமமான தாயோ உரிய காலத்திலே பால் ஊட்டி, குழந்தை நோயில்லாமல் வளருவதில் கவனம் செலுத்துகிறாள்.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து………"
"தாயாய் முலையைத் தருவானே
தாராதொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ"

என்ற அடிகள் இறைவன் உயிர்களாகிய குழந்தைகளுக்குத் தாயிற்சிறந்த தாயாக அருள் பாலிக்கிறான் என்பதையும், அவனுடையதிருவருள்பெறுவிடின் உயிர்கள் சவலையாகக் கழிந்து போகும் என்பதையும் எடுத்துக்காட்டுகின்றன.

குழந்தைகளுக்கு இயல்பிலே இது அம்மா, அப்பா, தாத்தா என்று அறிந்துகொள்ளும் தன்மை கிடையாது, தாய் ஒவ்வொருவராகக்காட்டித்தெரிவித்தால்தான் தெரிந்துகொள்ளும்.

அதுபோலவே உயிர்களும் இறைவனைத் தாமாக அறிந்துகொள்வதில்லை. "அவனருளாலே அவன்தாள் வணங்கி" "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" என்றவாறு அவன் திருவருளாலேயே அவனைத் தெரிந்து வழிபடமுடியும். அதனை வாதவூரர்,

"நாயேனைத் தன்னடிகள்
பாடுவித்த நாயகனை"

என்கிறார்.

குழந்தைகள் பொம்மைகள் மாதிரி வைத்த இடத்தில் இருப்பதில்லை. நாம் அவர்கள் எதைச் செய்யக்கூடாது என்று நினைப்போமோ அதைக் கட்டாயம் செய்துதீருவார்கள். ஒருவீட்டில் நுழைந்தவுடன் சாமான்கள் மேலுங் கீழுங் கிடப்பதையும்இரைச்சலும் கூச்சலும் உண்டாவதையும் கண்டோமானால் அந்த வீட்டில் நிறையக் குழந்தைகள் இருக்கின்றன என்று சொல்லாமலே தெரிந்துகொள்வோம்.

நாம் ஒரு அழகியகண்ணாடிசாமான் வைத்திருக்கிறோம். அதை நமது தோழிகள் வரும்போதெல்லாம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். ஒரு அம்மையார் தனது அருமைச் சிறுவனுடன் நம் வீட்டிற்கு வருகிறாள். வழக்கம்போல் அவளிடம் அதைக் காட்டுகிறோம. அவள் 'என்ன அழகு! எத்தனை ரூபா கொடுத்தாலும் இப்படிப்பட்ட பொருள் இந்தக்காலத்தில் கிடைக்காது" என்று மெச்சுகிறாள். நமக்கு ஆனந்தம்பொங்குகிறது. அந்தச் சமயத்தில் அவள் சிறுவன் 'நானும்பார்க்கிறேன்' என ஓடிவந்து இழுக்கிறான், சாமான் படார் என்று கீழே விழுந்து உடைகிறது.

அப்பொழுது நமக்கு அந்தக் குழந்தையை அடித்து நொறுக்கிவிடலாமா என்று ஆத்திரமும் கோபமும ஏற்படும். அந்தச் சிறு பையனின் செயலை உயிருள்ளளவும் மறக்கமாட்டோம். வருகிறவர்கள் போகிறவர்களிடமெல்லாம் சொல்லிக்காட்டுவோம்

ஆனால் அதே சாமானை நமது குழந்தை உடைத்துவிட்டால் உடனே கோபத்தில் நான்கு அடி அடித்துவிட்டாலும், 'சாமான் போனாலும் போகிறது குழந்தையைக் கன்னம்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஹூ கார்த்திகை ௧௭௨ செவ்வாய்க்கிழமை


## சமயபாடப் பயிற்சி

வித்தியா பகுதியாரின் புதிய திட்டப்படி ஒவ்வொரு மதத்திற்குரியபிள்ளைகளுக்கும், அந்தந்த மதத்திற்குரிய சமயபாடம் படிப்பிக்கப்படல் வேண்டு மென்ற நிபந்தனையும், அப் பாடங்களை எஸ். எஸ். ஸீ.; ஏச். எஸ். ஸீ. முதலிய வகுப்புப் பரீட்சைகட்கு ஒரு பாடமாக மாணுக்கர் பயின்று பரீட்சையிற் பிரவேசித்துச் சித்தியடையலா மென்றும் ஒழுங்குண்டாம்; இவற்றின்படி இக்காலத்திலே சைவ பௌத்த இஸ்லாமிய கிறீஸ்த்வ மார்க்கங்களுக்குரிய பிள்ளைகளுக்கு மேலே சொல்லப்பட்டவகுப்புக்களின் பரீட்சைகளிற் பிரவேசிக்கும்போது, அந்தந்தச் சமயங்களுக்குரிய நூல்களும் இன்னின்னஎனத் தொகுத்து விதித்துப் பயிற்றப்படலாயின,

இங்ஙனமாக, நாம் அறிந்த வரையில், பௌத்த இஸ்லாமிய கிறீஸ்தவ சமய மாணுக்கர்களுக்கு அந்தந்த மார்க்கத்தவரால் நடத்தப்படும் கல்லூரிகளிலும் வித்தியாசாலைகளிலும் அவ்வச் சமயபாடமாக விதிக்கப்பட்ட நூல்களே பரீட்சைக்கும் பயன்படும்வண்ணம் பயிற்றப்பட்டுவர, சைவக் கல்லூரிகளிலும் சைவ வித்தியாசாலைகளிலும் சமயபாடம் பரீட்சைக்குரிய பாடங்களுளொன்ருகப் பயிற்றப்படுதல் குறைவெனலாம்; சைவக் கல்லூரிகள் கலாசாலைகளுட் சிலவினுஞ் சிலவில் மாத்திர மொழிய, ஏனைய கல்லூரிகள் கலாசாலைகளிலுள்ள மாணுக்கர்கள் தங்கள் பரீட்சையின் பொருட்டுச் சமய பாடத்திற்குப் பதிலாக வேறு ஏதும் பாடத்தைப் பரீட்சைக்குப் பயின்று பிரவேசித்துச் சித்தியடைய முயலுகின்றனராம். சைவக்கலாசாலையொன்றிற் பயிலுஞ் சைவப்பிள்ளைகளுட் சிலர் சமய பாடத்தையும் பரீட்சைக்குரிய ஒரு பாடமாகக் கொள்ள வேண்டி நேர்ந்தபோது, சைவ சமயத்திற்கென விதிக்கப்பட்ட பாடத் தொகுதியை விடுத்து, விவிலிய நூலையே சமய பாடமாகக் கொண்டனரெனவும் அறியலானேம்; இப்படியாகக் குறித்த பிள்ளைகள் சமயபாடத்தை மாற்றிப் பரீட்சைக்குக்கொண்டமைக்குக் காரணம், அப்பிள்ளைகள் விவிலிய நூலை முந்திப் படித்துள்ளமையும், சைவசமய பாடத்தை எக்காலத்தாயினும் பயிலாமல் விட்டமையுமெனஅறியலானேம்.

சைவசமயப் பிள்ளைகளல்லாமல் இலங்கையிலுள்ள ஏனைய மூன்று சமயப் பிள்ளைகளும் ஒருபோதும் இப்படி மாறிப் பாடங்கொள்ள மாட்டார்களே! இதற்குக் காரணம் பிள்ளைகளிடத்திலே சமயாபிமான மில்லாமையல்ல; சைவப் பெற்ரூர், சைவ வித்தியா தாபனங்களின் அதிகாரிகளென் றிருப்போர், இப்படியான தாபனங்களிலே கல்விபயிற்றும் உபாத்தியாயர்களென்னுமிவர்களிடத்திலே இம்மியத்தனையும் சமயாபிமானமும் சமயானுட்டானமும் இல்லாமையேயாகும்.

சைவ கலாசாலைகளின் தலைமை யுபாத்தியாயரும் ஏனைய உபாத்தியாயர்களும் எப்போதும் சைவப் பிள்ளைகளுக்குச் சைவசமய பாடத்தையே பரீட்சைப் பாடங்களுளொன்ருய் நியமித்து நன்கு பயிற்றிவருதல் வேண்டும்; சைவவித்தியாசாலை, கல்லூரிகளின் அதிகாரிகள்ாயுள்ளவர்கள் சமயபாடமும் பரீட்சைப் பாடங்களுளொன்ருகப் பயிற்றப்படல் வேண்டு மென்ற விஷயத்தில் அழுத்தி நிற்றல் வேண்டும்; அதனோடு தமிழறிவு, சைவசமய அறிவு படைத்த உபாத்தியாயர்கள் ஒருவர் இருவரையேனும் தங்கள் கலாசாலையில் நியமித்தல்வேண்டும்; பெற்ரூர் உற்ரூராயுள்ளவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சைவ சமயபாடம் கற்பிக்கப்படல் வேண்டுமென ஆசிரியர்கள் அதிகாரிகளிடத்தில் வற்புறுத்திநிற்றல்வேண்டும்; இச் சைவபரிபாலனசபை போன்ற சபைகள் சங்கங்கள் சைவக் கலாசாலை கல்லூரிகளிலே சமய பாடங்கள் கிரமமாகப் பயிற்றப்பட்டு வருகின்றனவோ என்பதைக் காலந்தோறும் ஆராய்ந்தறிந்து ஆக வேண்டிய விருத்திகளைத் செய்வதோடு, சமய பாடத்திலே திறமையான சித்திபெற்று வரும் மாணுக்கர்களுக்குச் சிறந்த பரிசுகள் கொடுத்து அப்பிள்ளைகளை மேலும் மேலும் ஊக்க வேண்டும்; இப்படிச் செய்யின் காலகதியிலே சைவசமய பாடத்திற் பிள்ளைகளுக்கு ஆர்வம் பிறக்க, அதனுல் அப்பிள்ளைகள் அபிமானத்தோடும் அநுஷ்டானத்தோடுங் கூடிய நல்ல சைவமக்களாக வருதல் கூடும்.

## அரசாங்கத்தின் முதல்வெற்றி

தேசாதிபதியின் பிரசாரணம் சம்பந்தமாக நிகழ்ந்த விவாதத்திலே சேனுநாயக்கா அரசாங்கத்துக்கு வெற்றி கிடைத்துவிட்டது. எதிர்க்கட்சியினர்க்கிடையே கட்டுப்பாடான பரண ஒற்றுமை இல்லாமையும், அவர்களின் அடிப்படையான கொள்கைகளிற் காணப்படும் பரஸ்பரவேற்றுமையுமே, சுயேச்சைவாதிகளை அரசாங்கத்தின் பக்கலுக்கு இழுத்து, வெற்றியீட்டிக் கொடுத்தன என்று கூறலாம். இந்த வெற்றி மகத்தானது, எதிர்பார்த்த அளவுக்கு மேலானது என்பது உண்மையேயாயினும், இவ்வளவுடன் அரசாங்கம் திருப்திபடைந்து பழைய அரசாங்கசபையில் மந்திரசபையினர் எவ்வாறு கருமம் ஆற்றினரோ, அப்படிக் கருமம் ஆற்ற எண்ணுமேயானல், கூடிய சீக்கிரம அது தனக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளும் என்பதை இப்போது எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேம். இந்நாட்டின்பொருளாதார நிலைமை வரவர மோசமாகிக் கொண்டு வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் வரவா அதிகரித்து வருகிறது. இவற்றின் பயனுகக் களவு, கொள்ளை முதலாம துர்க்கிருத்தியங்கள் மலிந்து வருகின்றன. இவற்றை எல்லாம் [illegible] நிலைமையை [illegible]

# குறிப்புக்கள்

## சிறந்த முன்மாதிரி

சென்றவாரம் ஓர் குருட்டுமனிதர் பெற்ரோல் கட்டுப்பாட்டுக் கந்தோருக்கு ஏதோ கருமார்த்தமாகச் சென்று அதுசம்பந்தமான உத்தியோகத்தரைக் கண்டார்; சம்பாஷித்தார். அந்த உத்தியோகத்தருக்குக்கோபம் வந்துவிட்டது. அந்தக் குருட்டு மனுஷன் வைத்திருந்த பெற்ரோல் கூப்பன்களைப் பிடுங்கிக் கிழித்து எறிந்துவிட்டு, அவரையும் உதாசீனமாக ஏசினுராம். நிந்தனை செய்யப்பட்ட மனிதர் நேரே போக்குவரத்துப் பகுதி மந்திரி கௌரவ ஜே. எல். கொத்தலாவலையிடம் சென்று முறையிட்டார். மந்திரி அந்த மனுஷனுடன் உடனே மறப்பட்டுக் குறித்த கந்தோருக்கு வந்து விசாரணை புரிந்தார். அந்த உத்தியோகத்தர் செய்தமை பிழை எனக் கண்டார். அவரை அந்த வேலையினின்றும் நீக்கக் கட்டளைபுரிந்தார், அதுவுமன்றி தன்பகுதியில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர் அவர் எப்பதவியிலிருந்தாலும் சரி, பொதுமக்களிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டால் அதனைத் தாம் ஓர்போதும் சகிக்கமுடியாது என்றும் பகிரங்கமான ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிருர். மந்திரி அவர்களின் சிறந்த முன்மாதிரியை நாம் பாராட்டுகிறேம். இந்த முன்மாதிரியை மற்றும் மந்திரிகளும் பின்பற்றுவார்களேயானல், ஓர் சில அரசாங்க உத்தியோகத்தரின் கும்மாளங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது போலாகும்.

## விண்ணின்று உதித்தபிறவிகள்

அரசாங்க உத்தியோக பதவிகளில் இருப்பவர்கள் அனைவரும்இத்தகைய சர்வாதிகாரக் கர்வம்படைத்தவர்கள் என்று கூற நாம் முன்வரவில்லை. ஈகை, தயை, இன்சொல் என்னும் சுகுணங்களமையப்பெற்றுத் தாம் பொதுஜன ஊழியரே என்ற உண்மையை அகத்துட்கொண்டு எவர்க்கும் இதமாகக் கடமையாற்றும் உத்தியோகத்தரும் இந்த இலங்கையில் இருக்கிருர்கள்தான். ஆனல் அவர்களின் தொகை துர் அதிர்ஷ்டவசமாகக்குறைவு; காற்சட்டைமேற்சட்டைகளை அணிந்து, அரசாங்கத்துமேசைகளின்முன் நாற்காலிகளில் அமர்ந்தவுடன் தாம ஏதோ விண்ணின்றுதித்த உயரிய பிறவிகள் எனத் தம்மை மதித்து ஊரவர்களுடன் கடுகடுத்துப் பேசும் உத்தியோகத்தர்களும் இந்த நாட்டில் அநேகர் இருக்கிருர்கள். அந்நியராட்சியில் அத்தகைய மனோபாவம்கொள்ள ஏதும்காரணம்அவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனல் இன்று நிலவுவது ஜனநாயக ஆட்சி; பொதுமக்களின் பரிபாலனம் என்பதை அரசாங்க உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல்நலம். அப்படி அவர்கள்உணர்ந்து கொள்ளாதவிடத்து அவர்களுக்கு அரசாங்கத்திலே வேலையில்லை என்று அவர்களுக்கு வந்த வழிகாட்டிவிடுதல் அரசாங்கத்தின் முதற் கடமையாகும். அரசாங்கத்துச் சில்லறைத் தேவதைகளின் சேட்டைகளுக்குஜனநாயகஇலங்கையில் இடமில்லை.

# அரசியலில் தமிழர்

## தமது ஸ்தானத்தை இழந்துவிட்டனர்

ஓர்காலத்தில், இந்த இலங்கை அரசியல் வாழ்வில் தமிழ்மக்கள் பெரும் பங்கெடுத்து வந்தனர், அந்த நிலையை அவர்கள் இப்போது இழந்துவிட்டனர். அதற்குக் காரணம் இன்றுள்ள தமிழ்த் தலைவர்களின் பாரத அரசியல் மனப்பான்மைக் குறைவு என்று இலங்கைச் சர்வகலாசங்கப் போராசிரியர் திரு. எப். எச் வீ. குலசேகரம்டெயிலிநியூஸ்பத்திரிகையில் எழுதுகிருர். தமிழரின் இந்தக் கேவல நிலைக்கு முதற்காரணமாயிருந்தது 1931ம் ஆண்டு நிகழ்ந்த பகிஷ்கார இயக்கந்தான் என்று போராசிரியர் திரு. குலசேகரம் கூறி, மேலும் தெரிவிப்பதாவது

தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளையே தமிழ்மக்கள்பந்துக்கட்டாகஅனுப்பவேண்டும்! அப்படியனுப்பினுல், கட்டாயம் அத் தமிழ்க் காங்கிரஸ் வாதிகளையும் சேர்த்தே மந்திரசபையமைக்கப் பிரதமர்க்குநேர்ப்பந்தம் ஏற்படும் என்று சென்ற பொதுத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ பிரசாரம் செய்தது போட்டியிட்ட 9 தொகுதிகளில் 7 தொகுதிகளிலேதான் காங்கிரஸ் வென்றது. அதனை எதிர்த்த ஐ தே க. அபேட்சகர்கள் முறியடிக்கப்பட்டனர். தேர்தல் முடிந்ததும், தமிழ்க் காங்கிரஸ் எந்தவிதமான கொள்கையைய அரசியலிலே கைக்கொள்ளப்போகிறது என்று அகில இலங்கையும் அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்திருந்தது, தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பிடிவாதமாக இராமல், பூர்த்திசெய்யமுடியாத நிபந்தனைகளை விதிக்காமல் சம சமரசப் பான்மையுடன் இருந்தால் தமிழ்க் காங்கிரசுடன் சேர்ந்து ஓர் கூட்டரசாங்கம் நிறுவுவதை ஆலோசிக்க, பிரதமர் சேனுநாயக்கா இஷ்டமாயிருந்தார் என்பது ஓர் பகிரங்க இரகசியம், மிஸ்டர் சேனுநாயக்கா ஸ்ரீ ஜீ. ஜீ, பொன்னம்பலம் என்பவர்களுக்கிடையே ஓர் கூட்டுறவை ஏற்படுத்த இடையில் உள்ளவர்களும முயறசித்தனர். ஆனல் நடந்தது என்ன? காங்கிரஸ் தலைவர் காலத்தைக் கடத்தினுர் முக்கியம் வாய்ந்த ஓர் வாரத்தை யாழ்ப்பாணத்தில் வரவேற்புபசாரங்களிலும், மலர்மாலைசூட்டுவிப்பதிலும் செலவழித்தார் அன்றி, கொழும்பு சென்று மிகவும் நுணுக்கமான கஷ்டமான, இராஜதந்திரமான பேச்சு வார்த்தைகளுக்குத் தயார்செய்யவில்லை. அவ்வளவுடன் திரு. பொன்னம்பலம் நிற்கவில்லை. வட்டுக்கோட்டைத் தேர்தல் முடிவின்பின், ஓர் பிரயோசனமற்ற இராஜதந்

தொடர்ச்சி 5ம் பக்கம்

ப்பை இடதுசாரிகள் வசம் ஒப்படைக்க நாட்டுமக்கள் இப்போது தயாராகவில்லை என்பது சென்ற பாராளுமன்றத் தேர்தலாலும் இப்போது நடந்துமுடிந்த விவாத முற்றாலும் தெள்ளத்தெளியத் தெரியக்கிடக்கின்றது. இப்போதுதான் புதிதாகக் கடமையேற்ற மந்திரசபையினர், தம் கருமத்தில் முற்ருகப் பிரவேசித்து செய்யவேண்டிய கருமங்களைச் செய்வதற்கு நாட்டுமக்கள் சேனுநாயக்கா அரசாங்கத்துக்கு ஓர் சந்தர்ப்பத்தை அளித்துள்ளனர் இச்சந்தர்ப்பத்தை நேரியமுறையிற் பயன்படுத்தப் போகின்றனரா? அல்லது பழைய குருடி கத [illegible] கருமம் [illegible]னரா? இன்று அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டுள்ளவர்கள், தங்கள் கௌரவத்தை நிலைநாட்டி, இந்நாட்டைப் பீடித்திருக்கும் பொல்லாத வறுமைப் பிணியைப் போக்க, எல்லா முயற்சிகளையும் ஆற்றவேண்டும்; சமசமாஜிகள், சமதர்மிகள் முதலாம நவீன கொள்கையாளரின் மும்மரத்தை இலங்கை அரசியல் அரங்கத்திலிருந்து அகற்றுவதற்கு அதுதான் மார்க்கமன்றி அவர்களைத் திட்டுவதாலல்ல; இலங்கையை எதிர்நோக்கிவரும் காலம் இலங்கையரசாங்கத்துக்கே ஓர்சோதனைக் காலம்: இதனை அது எவ்வாறு சமாளிக்கும் என்பதை அகில இலங்கையும் — ஏன் அகில உலகமும்—ஆவலுடன் எதிர்பார்க்கிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மன்றமா? பேச்சு மேடையா?

## பாராளுமன்ற விகட நாடகம்

### பரஸ்பரம் வசைமாரி; பணம் இறைப்பது யார்?

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறார் ]

சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கமாக இலங்கைப் பாராளுமன்றத்தில் தேசாதிபதியின் பிரசாரணம் சம்பந்தமான விவாதம் நடந்துவந்தது. பெயரளவில் இது அரசியல் விவாதமேயன்றி, உண்மையில் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் பரஸ்பரம் உள்ள தங்கள் பழைய கோபத்தை எடுத்துக்காட்டுவதற்காக நடந்த தமாஷ் என்றே இதனைக் கூறவேண்டும். இந்த விகட நாடகத்துக்கு முதல் வழிகாட்டியாக இருந்தவர் இலங்கைப்பிரதமர் மிஸ்டர் சேனநாயக்கா என்றே கூறவேண்டும். மிஸ்டர் சேனநாயக்கா ஓர் பழுத்த அரசியல்வாதி. இன்று இலங்கையின் அரசியல் முன்னேற்றத்துக்கு அவர் வெகுதூரம் பொறுப்பாளி என்பதை எவரும் மறுக்கமுடியாது. இன்றுள்ள அரசியல் நிலைமையிலே சகல மக்களுடைய ஒற்றுமையையும் நாடவேண்டிய அவர், இடதுசாரிகளைத் தாக்கிப் பேசியமை அவ்வளவு சுபசகுனமல்ல என்பதே எனது அபிப்பிராயம். தேசாபிமானம், தேசபக்தி, என்பன மிஸ்டர் சேனநாயக்காவுக்கும் அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும்தான் உரிமைப் பொருளல்ல. மிஸ்டர் சேனநாயக்காவின் நரம்பில் எந்தத் தேசாபிமான இரத்தம் ஊடுருவிப் பாய்கிறதோ, அவ்வளவு சிரேட்டமான இரத்தம் பாராளுமன்றத்து எதிர்க்கட்சியினர் நரம்பிலும் ஊறிப் பாய்கிறதுதான். எனவே, அவர்களை—அவர்கள் இடதுசாரிகளாயினும் சரி, வலதுசாரிகளாயினும் சரி, அந்நிய நாட்டினர்க்கு இந்நாட்டைக் காட்டிக்கொடுக்க முற்பட்டுள்ள ஐந்தாம் படையினர் என்றோ துரோகிகள் என்றோ கூறமுடியாது. இலங்கையில் உள்ள சமதர்ம வாதிகள் இந்த நாட்டை அந்நிய நாட்டினர்க்குக் காட்டிக் கொடுக்கச் சதி செய்கிறார்களென்றும், அதற்கான போதிய அத்தாட்சி தம்மிடம் உண்டென்றும், அது இப்போது அதிகாரிகள் வசத்தில் உண்டென்றும் மிஸ்டர் சேனநாயக்கா கூறினார். இலங்கையில் உள்ள இடதுசாரிகள் இப்படியான அக்கிரமத்தைச்செய்தார்கள் என்ற ருசுக்கள் உண்டு என்றால், பிரதமர் ஏன் அவற்றை இதுவரை பகிரங்கப்படுத்தவில்லை? அப்படி அவர் பகிரங்கப்படுத்திப் பொதுஜனங்களையும் தமது நம்பிக்கைக்குப் பாத்திரவாளிகளாக்குவரேயானால், இப்படி இலங்கையைக்காட்டிக்கொடுக்கத் துணிவுகொண்ட துரோகிகளைப் பொதுமக்கள் ஒருபோதும் சும்மா விடமாட்டார்கள்: அவர்களுக்குத் தக்க பாடம் படிப்பிக்க அவர்கள் துடிதுடித்துக்கொண்டு நிற்கிறார்கள். ஆனால் இவ்விஷயமாக மிஸ்டர் சேனநாயக்கா மவுனம் சாதிப்பது பொதுமக்கள் மனத்திற் பலவிதமான சந்தேகங்களை உதிக்கச் செய்திருக்கிறது.

### எம்மவர் நிலைமை

இனி தமிழ்ப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் நடந்துகொண்ட விதமும் எங்கள் சமூகத்துக்கே மானக்கேட்டைத் தரக்கூடியது. இலங்கை அரசியல் மன்றங்களில் இதற்குமுன் இருந்த தமிழ்ப் பிரதிநிதிகள் நடந்துகொண்ட விதத்தை இப்போதுள்ள பிரதிநிதிகள் பின்பற்றிப் பூரண ஒற்றுமை கொள்ளாமல், பரஸ்பரம் வசைபுராணம் பாடியது ஓர் துக்ககரமானசெய்தியாகும். அது செய்வோம், இது செய்வோம். வானத்தை வில்லாக வளைப்போம்; மணலைக் கயிறாகத் திரிப்போம்; ஒருபடி அரிசியை இரண்டுபடியாக்குவோம்; கட்டுப்பாடுகளை அகற்றி எல்லாரும் இன்புற்றிருக்க வாழ வகை தேடுவோம் என்று பொதுஜனங்களுக்குச் சொல்லி அவர்கள் வாக்குரிமைகளைக் "கவர்ந்து" சென்ற இப்பிரதிநிதிகள் அனைவரும் இன்று செய்வது என்ன? ஓர்சிலர் மந்திரப் பதவிகளில் வீற்றிருக்கிறார்கள் இன்னும் சிலர் அம்மந்திரிகளுக்குப் பக்கபலமாக நிற்கிறார்கள். இன்னும் ஓர்சிலர் எதிர்க்கட்சி என்ற ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### வாய்ப்பேச்சு வீரர்

தேசாதிபதியின் பிரசாரணத்திற் பல விஷயங்களைக் காட்டியிருந்தார்கள். இவ்விஷயங்கள் சரியானவையா? அவ்விஷயங்களைக் கடைப்பிடித்தால் நாட்டுக்கு நன்மை விளைவிக்கலாமா? அவற்றை எந்த எந்த முறையிற் கடைப்பிடிக்கலாம்? அவை பிழையானவை என்றால், அவற்றுக்குப் பதிலாக வேறு எந்த விஷயங்களைக் கைக்கொள்ளவேண்டும்? என்னும் இன்னோரன்னவற்றைப்பற்றிப்பேசி முடிவுக்கு வரவேண்டிய எம் பிரதிநிதிகள் அன்று நடந்துகொண்ட விதம் மிகவும் கேவலமானதென்றே கூறவேண்டும். தேர்தற் காலத்திலே எதிரிகள் எந்தவிதமான நடவடிக்கைகளைக் கையாண்டனர்? அவற்றைத் தாம் எப்படி முறியடித்தனர், வெற்றிகொண்டனர்? என்பதுபற்றி இவர்கள் பேசினார்களேயன்றி வேறெந்தவிதத்திலும்நாட்டுக்குநன்மைபயக்கும் விஷயங்களை எடுத்தாளவில்லை. இந்த வசைமாரி பொழிவதற்குத்தானா இந்தப் பிரகஸ்பதிகளுக்கு இலவசப் பிரயாணம், இலவசத் தபால், தங்கிவசதி கொழுத்த சம்பளம் என்பன அளிக்கப்படுகின்றன. இவைமாத்திரமா? இப்பிரகஸ்பதிகள் பாராளுமன்றத்திலேயிருந்து திருவாய்மலரும் ஒவ்வொரு சொல்லையும் சுருக்கெழுத்தில் எடுத்து அதனை "டைப்" அடித்துப பின் அதனை அச்சிட்டு நூலாக்க, ஒரு சொல்லுக்கு இரண்டுசதம் செலவாகிறது என்று 10 ஆண்டுகளுக்கு முன் கணிக்கப்பட்டது. இப்போது அச்செலவு அதிகரித்திருக்கும் அப்படியானல், எங்கள் பாராளுமன்றத்து வாய்ப்பேச்சுவீரர்கள், பேசும்போது எத்தனை ஆயிரம் சொற்களை ஓர்தரத்தில் கொட்டிவிடுவார்கள். அதன் பொருட்டு எத்தனை ஆயிரம் ரூபா ஏழை இலங்கை மக்கள் வரிப் பணத்திலிருந்து விரயமாகின்றது? என்பதனைப் பொதுஜனங்கள் தீவிரமாக ஆலோசிக்குங்காலம் வந்துவிட்டது. எந்த அங்கத்தவராவது விஷயத்தோடு சம்பந்தமற்ற பேச்சை எடுக்கக்கூடாது. இத்தனை விஷயங்களுக்குமேல் பேசவொண்ணாது என்று பாராளுமன்றத் தலைவர் கண்டிப்பாகப் பிரமாணம் இயற்றவேண்டும். அப்படி இயற்றாத பட்சத்தில் பொதுஜனங்கள் கிளர்ச்சிசெய்து, இந்தப் பாராளுமன்றப்பிரகஸ்பதிகளுக்குத்தாமே வாய்ப்பூட்டு இடவேண்டும்.

---

கடிதங்கள்

### பண்ணைப் பாதை

ஐயா!

அரசாங்கத்தார் பண்ணைத் துறைக்கு இரு பக்கங்களிலிருந்தும் அணையமைத்திருப்பது பல தீவுகளுக்கும் பிரயாணஞ் செய்வோர்க்குப் பெரியதொரு வசதியாயிருக்கும். இடையிடையேயுள்ள பாகத்திற்கு இயந்திரப் பாதையோ, பாலமோ அமைத்துவிடுவது இன்னும் பெரிய வசதியாகும். இது கூடியசீக்கிரம் அமைக்கப்படாவிடின் பிரயாணிகள் நெடுந்தூரம் நடந்து கஷ்டப்பட நேரும். இவற்றைவிட, இன்னும் இரண்டு வசதிகள் அவசியஞ் செய்யப்படவேண்டியன.

முதலாவது இருட்டுக்காலம் மழைகாலங்களில் பிரயாணிகள் வெளிச்சமின்றி எவ்வளவோ இடருறுகின்றனர். இக்கரைசேர்ந்தோர் வழியில் வெளிச்ச மின்மையால் தட்டுத்தடுமாறிச் சவுக்கடிச் சந்திக்கு வரவேண்டியிருக்கிறது. மேலும் அவ்வழி திருடர்பயம், விஷபயம் உள்ளதாகவுங் கூறுகின்றனர். இரவில் அவ்வழிச் செல்வோர் உதவியற்ற பயங்கர நிலையில் இருப்பதை எவரும் மறுக்கமுடியாது.

இரண்டாவதாக ஆயத்திற் கணித்தாய் அவசியம் ஒரு மலகூடம் அமைக்கப்படல்வேண்டும். அதுவின்றி அவ்விடம் வதியும் ஆயக்காரர் வள்ளக்காரர்களும், பிரயாணிகளும் அவசிய கருமம் முடித்தல் எவ்விதம் கூடும்? அவர்கள் அணைக்கட்டை அசுசிப்படுத்த அவசியம் நேருமல்லவா? கால்நடையாகச்செல்வோர் கட்டின் இருபக்கங்களும் கண்டபடிகழிக்கப்பட்ட மலத்தால் களங்கமடைந் திருப்பதைக் கண்கூடாகக் காணலாம். ஆரோக்கியம், ஆறுதல் ஆதியவற்றுக்காக அவ்வணைவழியே உலவச் செல்வோர் அசுத்தங்களைக் கண்டு எத்துணை அருவருப்பையும் ஆறுதலின்மையையும் அடைவரென்பது சொல்லாமலே விளங்கும்

ஆதலின், இவ்விரு பெருங் குறைகளாலும் நேருங்கஷ்டங்களை நிவிர்த்தி செய்ய ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் முன்வந்து ஆவன செய்வார்களாக. எவ்வளவு சீக்கிரம் இக்குறைகள் நீக்கப்படுமோ, அவ்வளவுக்கு அதிகமாக அதிகாரிகள் பொதுசனங்களது நன்மைக்கும் நன்றிக்கும் பாத்திரராவர்.

இங்ஙனம்
ஒரு தீவுவாசி

### வெள்ளரச மரத்துப் பிள்ளையார் எங்கே?

ஐயா,

25-11-47 ல் தாங்கள் எழுதிய பிரகாரம் வெள்ளரசமரத்துப் பிள்ளையார் அநுரத புரியில் அகற்றப்பட்டதை அறிந்து மிகவும் மனவருத்தம் அடைகிறோம். நைனாதீவு, வதுளை ஆகிய உத்தனையோ இடங்களில் இன்றும் சண்முகப்பிரான் விஷ்ணு கஜமுகர் ஆகிய திருவுருவங்கள் புத்தகோயில்களில் வைக்கப்பட்டு சிங்கள மக்களாலும் பூசிக்கப்பட்டு வருவதைக்கண்டு யாமும் பூரித்து சகோதர மனப்பான்மையுடன் இருந்து வந்தோம். யாழ் நகரிலும் நைனாதீவிலும் உள்ள புத்தசமய நிலையங்களுக்கு தமிழ்மக்கள் மரியாதை காட்டுவதுடன் காணிக்கை போடுவதையும் காணலாம். நைனாதீவிலுள்ள புத்த கோயிலிலும் விநாயக ரூபம் இருப்பது சைவசமயிகளுக்கு புத்தர் தம் சகோதரர் என்ற உணர்ச்சியைக்கொடுத்து இருபாலாரிடத்தும் அன்பை வளர்க்கிறது.

வதுளையிலுள்ள தபால் நிலயத்திற்கு அயலிலே உள்ள ஓர் கோயிலில் சைவமக்களும் சிங்களவரும் திருவிழாக்கள் செய்து பரஸ்பரம் ஒற்றுமையுடன் வாழ்கிறார்கள்.

இது இவ்வாறிருக்கவும் சிங்கள மக்களுட் சிலர் தேசீயம் பேசிக்கொண்டும் திருவுருவச்சிலை விஷயமாக மிகவும் குறுகிய மனப்பான்மையோடு நடப்பது வருந்தத்தக்கது. அவர்களின் அன்புக்குரியவர்களாக இருக்கும் ஸ்ரீ C. சுந்தரலிங்கம் M. P., ஸ்ரீ C. சிற்றம்பலம் M. P., ஆகியவர்கள் முற்பட்டு நல்வழிப்படுத்தி சமூகஒற்றுமைக்கு விதைபோடல் வேண்டுமென்று விக்கினேஸ்வரப் பெருமானை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்
R. T, சுப்பிரமணியம்

---

# தில்லைத் திருநடனம்

## அது காட்டும் இன்பம்

### இன்பஉணர்வும் அன்புப்பெருக்கும்

(பேராசிரியர் த. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை M. A.)



வழிபாட்டிற்குரிய உருவம் அறிகுறியாகமட்டும் இருத்தல் போதாது. அழகுடனும் மிளிரவேண்டும். நம் தமிழ்நாட்டினர் இதனை நன்கு உணர்ந்திருக்கின்றனர். தமிழர்கள் அழகிலே மிக்க ஈடுபாடுடையவர்கள். எனவேதான் அவர்கள் 'முருகு'வை — அதாவது அழகினைத்தங்கள் தெய்வமாகக் கொண்டிருந்தனர். முருகு, அன்பையும் அறிவையும் வளரச்செய்வதுடன் என்றும் அழியாத ஒருநிலையுள்ள பொருளாகவுமிருக்கிறது

தமிழர்கள் இயல், இசை, கூத்து என்ற மூன்றையும் இனிது போற்றி வளர்த்து வந்தனர். ஆனால் இன்று முத்தமிழில், நாடகத் தமிழ் - கூத்துத் தமிழைக் காணுவது குதிரைக் கொம்பாகிவிட்டது. இம்முறையிலே தமிழர்கள் தாங்கள் கூத்துத் தமிழைக் காணமுடியாமல் அல்லற்படும் போது தில்லைத்திருநடனம் நமக்கு ஒல்காப் பெரும்புகழையளிக்கிறது. இலங்கையில் தோன்றிய பெரியார் ஆனந்தகுமாரசுவாமி அவர்களே மேனாடுகளிலும் சென்று கலையில் தில்லைத் திருநடனத்தை மிக்கதும், ஒப்பதுமில்லை என்பதைத் தெளிவாக விளக்கிக்காட்டியுள்ளார்கள். தில்லைத் திருநடனம் எந்நாட்டவரின் உள்ளத்தையும் கவர்ச்சி செய்யக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது.

கல்லைக் கொண்டுவந்து, சிற்றுளி வேலைசெய்து, அதனை உருவாக்கித் தந்த சிற்பி மண்ணோடு மண்ணாகிவிட்டான் அந்த சிற்பியால் [illegible] கலைவிளக்கம் [illegible] விளங்குகின்றன. அந்தச் சிற்பியைப் பற்றி இங்கு சிந்திப்பவர்கள் எவருமில்லை

குழந்தையிடம் மரத்தினாற் செய்த ஓர் யானையைக் கொடுத்தோமானால், எவ்வாறு அக்குழந்தை அது மரத்தினாற் செய்யப்பட்டதென்பதை மறந்துவிட்டு, தன்னுடைய ஈடுபாட்டையெல்லாம் அதனிடம் செலுத்தி எவ்வாறு அந்த யானையிடம் இலயித்து விடுகிறதோ அதைப் போலவே நாமும் நமது கலை வளர்க்கும் சிற்பங்களைக் கண்டபோது, அவை கல்லினாற் செய்யப்பட்டது, செம்பினாற் செய்யப்பட்டது, களிமண்ணாற் செய்யப்பட்டது என்பனவற்றை யெல்லாம் மறந்து, நம்மையே மறந்து அச்சிற்பங்களிடம் இலயித்து விடுகிறோம்.

மூவேந்தரின் கலை பண்பாடு இவைகளெல்லாம் இருந்த இடந் தெரியாமல் மறைக்கப்பட்டு, அயலவரின் கலையும் நாகரிகமும் நம்முடைய இரத்தத்துடன் [illegible] போதிலும், கலைகளை விளக்கும் சிலைகள்மட்டும் நம்மிடையே இன்றும் மிளிர்கின்றன.

காளியின் நடனம் பசி, பட்டினி, கொடுமை இவைகளையே நாட்டில் நடமாடச் செய்வதாக இருந்தது. காளியின் இத்தகைய துன்பக்கூத்தை அடக்கி, அன்பையும் இன்பத்தையும் நிலவும்படி செய்ய ஆண்டவன் ஆடிய இன்ப நடனம்தான் தில்லைத்திருநடனம். (கல்லிலும், செம்பிலும் காணும், வெளித் தோற்றத்திலே நமது கருத்தைச் சிதறடித்துவிடாமல் அதனுள் மிளிரும் இன்ப உணர்வையும் அன்புப் பெருக்கையும் நாம்காண முயலுதல்வேண்டும் அம் முயற்சிக்கு உதவி புரிவதுதான் தில்லைத் திருநடனம்.

நம் கோவில்கெல்லாம் ஏமாற்றுக்காரர்களின் சத்திரங்கள் சாவடிகளல்ல. சாத்திரங்களை ஓவியத்தில் தீட்டி அவைகளை அனைவருடைய சுக(மன)ங்களிலும் பதியும்படி செய்வதற்காக ஏற்பட்டவைதான் கோவில்கள்.

எனவே நாம், இத்தகைய இன்பக் கூத்தில் திளைத்து மென்மேலும் இக்கலைகளை வளர்த்து நம் வாழ்வை வளப்படுத்துக் கொள்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்சப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கோடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகோடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கோடுக்கப்படும்.

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)



# சைவக் கிரியை விளக்கம்

இது சைவ நன்மக்கள் தாம் செய்யும் சமயக் கிரியைகளின் உட் கருத்தையும், நோக்கங்களையும் எடுத்து இலகுவில் விளக்கும் தமிழ் வசன நூலாகும், இதனை எழுதியவர்:

**ஆசிரியர், திரு. சு. சிவபாதசுந்தரம், (B.A.) அவர்கள்**

இதன் இரண்டாம் பதிப்பு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் வெளியீடாக வுள்ளது.

**விலை சதம் 50 (8 அணா)**

வண்ணார்பண்ணை 4-11-47 — மனேஜர், யாழ்ப்பாணம், சைவப்பிரகாசயந்திரசாலை



விளம்பரமின்றேல் பெருப்பணமில்லை



# மலேயாவுக்குக் கப்பல் பிரயாணம்

யாழ்ப்பாணம்—சென்னபட்டணம—பினங்—சிங்கப்பூர்

சென்னபட்டணம் மார்க்கம் பினங், சிங்கப்பூருக்கு மாதம் இருமுறையும் நேரே சிங்கப்பூருக்கு ஒருமுறையும் வசதிகளடங்கிய,

**கப்பல் பிரயாணச் சீட்டு**

எம்மூலம் 1947 நவம்பர் மாதம் தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்

**எஸ். ஆர். எஸ். நாதன்**
21/3, ஸ்ரான்லி ரோட் :: யாழ்ப்பாணம்

Std 22, 6-6-47—6-6-48


## நூல்களைப் பற்றிய குறிப்பு

### சிவபோகசாரம் மூலமும் உரையும் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பும்

தருமபுர ஆதீனம் மாயூரம் P O
(விலை குறிக்கப்படவில்லை)

இந்நூல் தருமபுர ஆதீன கர்த்தாவாகிய ஞானசம்பந்தசுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. கஙக வெண்பாக்களைக் கொண்டது. தத்துவரூபம் முதற் சிவபோகமீறாயுள்ள பத்துக் காரியங்களும் தசகாரியமெனப்படும். ஏனைய ஒன்பது காரியங்களும் சிவபோகத்தைப் பெறுதற்குப் படிகளாதலால், அவற்றைக் கடந்து சிவபோதத்தைப் பெறுதல் கரும்பின் தோல் சக்கை முதலிய வற்றைக் கடந்து அதன் சாரத்தைப் பெறுதலை ஒத்தலால், சிவபோகமானது சாரமெனப்பம். சிவபோக சாரம் என்பது சிவபோகமாகிய சாரம் எனவிரியும்.

சிவபோகமாகிய சிவாநந்தம் படிப்படியாக வளர்வதன்றாதலால், அதைக்கூறும் பாடல்கள் தொடர்புடையனவாகா. ஒரு பொருளைக் குறிக்கும் சொற்கள் பலவாய் வேறுபட்டுத் தொடர்பற்றிருத்தல் போலச் சிவபோகத்தைக் கூறும் இந்நூற் பாடல்கள் பலவேறு வகைப்பட்டுத் தொடர்பின்றிச் சிவாநந்தமணம் வீசித் தம்மைச்சார்ந்தோரை அதனிடத்திழுக்கின்றன. இப்பாடல்களுட் பல தமது ஞானகுரவராகிய திருவாரூர் ஞானப்பிரகாச சுவாமிகளைத் துதிக்கும் பாடல்களேயாம். நூல்களைக்கற்றுத் தத்துவ ஆராய்ச்சி செய்வதாற் பயனில்லையென்பார் "தத்துவமெண்ணித் தலையடித்துக் கொள்ளாதே" என்றும் சிவஞானபோகத்தை விரும்புவோர்க்கு நூற்கல்வி வேண்டுமாயின் "சித்தியிலே, ஓர்விருத்தப்பாதி போதும்' என்றும் குருகடாட்சமே முக்கியமானதென்றும் சுவாமிகள் ஓரிடத்திற் கூறுகின்றார் இச்சிவபோக சாரம் நித்திய பாராயணத்துக்குரியது.

இதற்குத் தெளிவான உரையெழுதியவர் வித்துவான் ஸ்ரீ சி அருணைவடிவேலு முதலியாரவர்கள். இதன் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு மிகவும் சிறந்தது. இதை மொழிபெயர்த்தவர் 'மும்மொழிப் புலவரும் ஆதீன வித்துவானுமாகிய ஸ்ரீ ப. மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் M. A., L. T." ஆவர்.

இதற்கு முகவுரை எழுதியவர் சைவத்தையும் தமிழையும் வளர்த்தலையே தனி நோக்கமாகவுடைய திருப்பனந்தாள் ஆதீன மஹாசந்நிதானத்தாலே நிறுவப்பட்ட செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியராகிய ஸ்ரீ ச. தண்டபாணி தேசிகரவர்களாவர்.

சு. சி.

●

### திருக்கானாட்டுமுள்ளூர் திருப்பதிகம் பொழிப்புரையோடு

சுந்தரமூர்த்திநாயனார் பாடியருளியதாகிய திருக்கானாட்டுமுள்ளூர்த் திருப்பதிகம், மேற்படி ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுள்ளத்தின்படி பொழிப்புரையோடு மேற்படி ஆதீன 145ம் வெளியீடாக வெளிவந்துள்ளது. திருக்கானாட்டு முள்ளூர்த்தல வரலாறு:—

இத்தலம் தென்னாற்காடு ஜில்லா சிதம்பரம் தாலுக்காவில் உள்ளது. தலவரிசையில் முப்பத்திரண்டாவது தலமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இறைவன் பதஞ்சலிநாதர் இறைவி கானார்குழலி. காட்டுமன்னார் கோயிலுககுத் தென்கிழக்கே ஐந்து மைல் தூரத்தில் இத்தலம் விளங்குகிறது. ஆண்டுதோறும் கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகளில் சுவாமி தீர்த்தங்கொடுத்தருளுவர்.

## தேகவியோகம்

தங் முத்து

வல்வெட்டி ஆங்கில வைத்தியர் கந்தப்பசேகரர் அருளம்பலம் அவர்களின் மனைவியார் ஸ்ரீமதி தங்கமுத்து என்பவர் சர்வசித்து ஹூ ஐப்பசிமீ 19ந்திகதி செவ்வாய்க்கிழமை [illegible] 7 மணியளவில் [illegible] ரப்பிள்ளை அயலார் இனத்தார் ஊரவர்கள் முதலானோர் வருந்திப் புலம்ப, தேவாரம் திருவாசகம்திருப்புகழ்முதலானதோத்திரம் ஓத, தேகவியோகமாயினர். வயசு 79. இவரது ஆன்மா சாந்தியடைக.

## விளம்பரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதியிலுள்ள கிளாலிக்குள வாய்க்காலுக்கு ஓர் (கொங்கிறீற்) அணை கட்டுவதற்கும் அவ் வாய்க்காலைச் சுத்தம் செய்வதற்கும், வடமாகாண அரசாட்சி ஏசண்டர் 1947ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர் மாதம்) 16ந் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரைக்கும் நிரப்பப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் (ரெண்டர்) ஏற்றுக்கொள்வார். குறித்த விண்ணப்பப் பத்திரங்களை ரூபாய் ஐம்பது (50) கச்சேரியில் கட்டி வடமாகாண ஏசண்டரின் கையொப்பமிட்ட ஒவ்வொரு பற்றுச்சீட்டிற்கும் ஒவ்வொரு விண்ணப்பப் பத்திரமாக (ரெண்டர்) 1947ம் ஆண்டு மார்கழி (டிசெம்பர்) மாதம் 13ந் திகதி பகல் 12 மணிக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மறு விபரங்களை வடமாகாண அரசாட்சி ஏஜண்டரிடம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

G. 125 21 2-47

# திருச்சி ரேடியோ

**புதன் டிசம்பர் 3**

7 15 ஓதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 வாத்ய கதம்பம் 8 30 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 காஞ்சீபுரம் ஜி சாரங்கபாணி செட்டியார் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 55 முடிவு

5 வாளாடி எம் ருக்மணி புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 மேதினி 7 30 தமிழில் செய்திகள் 7 45 மதராவின் உள்ளபடி! 8 வாளாடி எம் ருக்மணி புல்லாங்குழல் 8 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 9 ஆங்கிலத்தில செய்திகள் 9 15 ஆங்கிலப் பேச்சு 9 30லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் 9 45 வாத்ய கதம்பம் 10 இசைவேளை 10 30 முடிவு.

**வியாழன் டிசம்பர் 4**

7 15 ஓதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 வி பி லக்ஷ்மி நாராயணமேனன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8 20 நாகூர் இ எம் ஹனிபா பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 குரல்வகை 2 15 கல்வி ஒலிபரப் 2 45 முடிவு.

5 நாகூர் இ எம் ஹனீபா பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7 15 செய்தி விளக்கம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 எம் ஏ கல்யாணகிருஷ்ண பாகவதர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 டி கே பட்டம்மாள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9 45 வி பி லக்ஷ்மி நாராயண மேனன் பாட்டு 10 30 முடிவு,

**வெள்ளி டிசம்பர் 5**

காலை 7 15 ஓதாரம்பம் இசைத்தட்டு 7 20 தமிழில் செய்திகள் 7 30 சுசீந்திரம் பி எஸ் மணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்யகோஷ்டி 8 30 ஏ எஸ் மகாதேவன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 ஏ எஸ் மகாதேவன் பாட்டு 2 சுசீந்திரம் பி எஸ் மணி பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 திருவெண்காடு பி எஸ் செல்வரத்தினம் பாட்டு 5 40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் எஸ் பக்கிரிசாமி பிள்ளை நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 நமது தபால்பெட்டி 8 திருவெண்காடு பி எஸ் செல்வரத்தினம் பாட்டு 8 30 கும்பகோணம் எஸ் பக்கிரிசாமிபிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 8 40 அறிவிப்புகள் வானிலை 9 45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

அந்தியின் வனப்புடைய மெய்க்குக னெழுப்புதலும் அன்னபொழுதே
யிந்திரனு மாதிர வரைப்பினரும் வானவரும் யாவருமெழாஅச்
சிந்தைதனின் மெய்யுணர்வு தோன்றுதலு முன்புரி செயற்கையுணரா
கந்தனொடு கோல்லமர் புரிந்ததென வுன்னினர் கலங்கியேவரும்.

செககர் வானம்போன்ற நிறம்பொருந்திய திருமேனியை யுடையவராகிய குமாரக்கடவுள் அங்ஙனம உயிர்கொடுத் தருளுதலும், இந்திரனும் திக்குப்பாலகரும் ஏனைய தேவர்களுமாகிய எல்லோரும் உடனே எழுந்து, தம்முள்ளத்தில் ஞானவுணர்ச்சி (முருகக்கடவுளருளினாலே) பிறத்தலும், தாங்கள் முன்செய்த அடாத செயலின் தவறை யுணர்ந்து, (எங்கள்) கந்தசுவாமியுடனு நங்கள் முந்தி யுத்தஞ்செய்தோம் என்று நினைத்தமாத்திரத்தே அவர்களெல்லோருங் கலக்கங்கொண்டவர்களாய் என்பது கருத்து.

வனப்பு இங்கே நிறத்தைக் குறித்து நின்றது; இந்திரனோடு திக்குப்பாலகருள் இறந்தவர்களாகிய வருணன், யமன், வாயு, அக்கினி யென்னு மிவர்களையும உயிர்பெற்றெழ அருளினராதலின் "இந்திரனும் மாதிர வரைப்பினரும்" என்றார், "வானவரும்" என்றது சந்திரன் சூரியனென்னு மிவர்களை; எல்லாமென்றது அங்கே மாண்டுகிடந்த ஏனைய சில தேவர்களை யென்க; அத்தேவர்கள் எழும்பொழுதே பெருமான் ஞானத்தோடு எழும் வண்ணந் திருவுளத்திற் கொண்டருளின ராதலின் மெய்யுணர்வு அவர்கள் மாட்டுத் தோன்றிய தென்க. கந்தனொடு கோல் என்பதிற் கொல் என்னு மிடைச்சொல் ஐயம் கழிவிரக்கம் அச்சமென்னும் பொருள்களைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. (79)

கலங்கினர் இரங்கினர் கலுழ்ந்தனர் புலர்ந்தனர் கவன்றனர் உளம்
மலங்கினர் விடந்தனை யயின்றவ ரேனும்படி மயர்ந்த னலிசேர்
உலங்கென வுலந்தனர் ஒடுங்கினர் நடுங்கினர் உரந்தனை யிழந்
திலங்கெழின் முகமபோல் விசந்தனா பொருந்தமை யிசழ்ந்தனர்களே.

கலங்கனார்கள், பச்சாத்தாபப்பட்டார்கள், கண்களில நீர்சொரியப் பெற்றார்கள், உலர்ந்தார்கள், கவலைப்பட்டார்கள், மனச்சோர்வடைந்தார்கள். நஞ்சைத் தாமேயெடுத் துண்டவரென்று (கண்டோர்) சொல்லும்படி மயங்கி நெருப்புக்குச் சமீபமாகப் பறந்துபோன கொதுகைப்போலச் சஞ்சலப்பட்டார்கள், சிறுமைப்பட்டனர், மனமும் மெய்யும் நடுங்கப்பெற்றார்கள், தங்களிடத்து இயல்பாகவுள்ள வலிமையுங் கெட்டு, அழகிய முகத்திலுள்ள மகிழ்ச்சியை யிழந்தார்கள், முருகக்கடவுளோடு மாறுபட்டுச் சமர்புரிந்தமையை யிட்டுத் தாமே தம்மை வெறுத்தார்கள என்பது கருத்து.

கந்தக் கடவுளினருளால் ஞானத்தையும் தம்மாருயிரையும் ஏககாலத்திலே பெற்றெழுந்தவர்களாகிய இந்திரன் முதலிய சில தேவர்கள், தம்மிடத்து அப்பொழுது உதித்த ஞானத்தினால், தாங்கள் முந்திச் சமர்புரிந்தமை குமாரக்கடவுளுடனென்பதை யுணர்ந்து பச்சாத்தாபப்பட்டபோது அவர்களிடத்துண்டான மெய்ப்பாடுகளும உள்ள நெகிழ்ச்சியும் இத்திருவிருத்தத்திற் காட்டப்பட்டன. பச்சாத்தாபப்படுதல்-ஒரு கருமத்தை முதல யோசியாமற் செய்துவிட்டுப் பின்னர் வருந்துதல், இத்திருவிருத்தத்தில் இரங்கினர் என்பதக்குக் கழிவிரக்கங் கொண்டனரெனப் பொருள் கொள்ளப்பட்டது; கலுழ்தல்—கண்ணீர் சொரிதல்; மலங்குதல்—சோர்வடைதல்; மயர்தல்-மயங்குதல்; அனலி-நெருப்பு. உலங்கு-கொது. இக்காலத்திற் கொசு என வழங்குகின்றது; நெருப்பைத் தானகப் போயடைந்து இடர்ப்படுங் கொதுகைப்போல, இத்தேவர்களும் தாமாக முருகவேளுக்கு மாறுச் சென்று சமர்செய்து இடர்ப்பட்டனராதலின் "அனலி சேர் உலங்கென வுலந்தனர்" என்றார். தாம் செய்த பிழைக்கும், அதனால் வந்த இடருக்குந் தாமே காரணராதலின், அத்தேவர்கள் தமை யிகழ்ந்தனரென்க. (80)

துஞ்சியெழு மன்னவர்க ளேழுலகு முன்னுதவு சுந்தரிதரும்
மஞ்சனரு ளோடுவனை யாடுவது காண்டலும் வணங்கி பனையான்
செஞ்சர ணிரண்டினையு முச்சிகொடு மோயினர் சிறந்தவர்துணைக்
கஞ்சமல ரிற்பல நிறங்கோளரி யின்றேகை கலவிய தேனவே.

இறந்து பின்னர் உயிர்பெற் றெழுந்தவர்களாகிய அத்தேவர்கள் ஏழு உலகங்களையும் ஆதியிற் படைத்துக் காத்தருளும உமாதேவியார் பெற்றருளிய திருக்குமாராகிய முருகக்கடவுள் திருவருளோடு விளையாடுதலைக் கண்டவுடனே, அப்பெருமானை வணங்கி, சிறப்போடு மலர்ந்த இரு செந்தாமரைப்பூவின் கண்ணே பலநிறமான வண்டுகள் படிந்தவாறு, அவருடைய செவ்விய திருவடிகளை (வீழ்ந்து பணிந்து) தம சிரமேற்கொண்டு மோந்தார்கள் என்பது கருத்து.

பெருமான் சமுகத்தில் அத்தேவர்களின்மரணம்சிறிதுநேரம் உறங்கிக் கிடத்தலை யொத்ததாதலின் இறப்புக்கும் உறக்கத்திற்கும் பொதுவாயுள்ள துஞ்சியென்னுஞ் சொல்லைப் பிரயோகித்தார்; சுந்தரி-சுகல அழகுக்கும் இருப்பிடமாகவுள்ள இறைவி, ஏழு உலகங்களையும் படைத்து அவற்றின் கண்ணேயுள்ள சராசரங்களை யெல்லாங் காத்தருளும் இறைவியின் புதல்வருக்கு இத்திருவிளையாடல்க ளெல்லால் இலேசானவை யென்பதைக் காட்டியவாறும்.

[இங்கே சுப்பிரமணியக் கடவுளுடைய திருவடிகள் இரு தாமரைமலராகவும நவரத்தினதாபிதமாய தேவர்களுடைய முடிகள் பலநிறம் பொருந்திய வண்டுகளாகவு மிருந்தனவென்க.] (81)

---

### பிரார்த்தனை

நிகழும் சர்வசித்து வருஷம் கார்த்திகை மாசம் 9-ம் நாள் (24-11-47) திங்கட்கிழமை சித்தன்கேணி சிவசிதம்பரேசுவரர் ஆலயத்தில் புதிய அரசியற்றிட்ட அங்குராப்பணத்தை முன்னிட்டு விசேஷ பிரார்த்தனைகளும் அபிஷேகாராதனைகளும் மிகவும் சிறப்பாக நடந்தேறின.

இலங்கையில் வாழும் எல்லாச்சமூகத்தாரும் தங்கள் தங்கள் உரிமைகளைப் பெற்றுச் சமாதான வாழ்வு நடாத்த எம்பெருமான் அருள்புரிவாராக.

---

### அரசியலில் தமிழர்

2—ம் பக்கத் தொடர்ச்சி

திரமற்ற பேச்சை உளறித்தள்ளிவிட்டார். அந்தப் பேச்சு ஐ. தே. கட்சியில் உள்ள பிற்போக்காளர்களுக்கும் வகுப்புவாதிகளுக்கும் வாய்ப்பாக இருந்தது. அவர்கள் இந்தப் பேச்சை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஐ. தே. கட்சிக்கும், தமிழ்க்காங்கிரசுக்குமிடையில் ஏற்படவிருந்த கூட்டுறவை முறியடித்துவிட்டார்கள்.

தமிழ் மக்கள் தாம் இழந்த கௌரவத்தையும் அந்தஸ்தையும் மீட்டும் அடையக்கிடைத்த ஓர் அரியசந்தர்ப்பத்தைக் கவிழ்த்துக்கொட்டிய பெருமை ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலத்துக்கே யுரியது. "செனநாயக்காவின் அரசாங்கம் எத்தனை நாட்களுக்கு நடக்கப்போகிறது; நாளைக்கே அது தலைகீழாகப் புரண்டுவிடும், அப்படிப் புரள இன்னோர் அரசாங்கம் நிறுவ எங்களுதவி கட்டாயம் தேவைப்படும்; அப்போது எங்கள் கருமத்தை நாம் சாதித்துக்கொள்ளுவோம்" என்றெல்லாம் ஓர்சிலர் காங்கிரஸ் தலைவர்க்குச் சகுனியுபதேசம் செய்தனர்.

நாங்கள் கடவுள் தந்த பொது அறிவை உபயோகித்துப் பார்க்கவேண்டும். இன்று எதிர்க்கட்சியில் 35. 40 பேர் உளர். இவர்கள் பாம்புக்கும் கருடனுக்கும் உள்ள சம்பந்தம் கொண்டுள்ள 6 கட்சியில் தனித்தனி சேர்ந்திருக்கிறார்கள். இந்த ஒவ்வொரு கட்சியும் நான் பெரிது, நான் பெரிது என்று சொல்லி, அதிகாரத்தையும் செல்வாக்கையும் கைப்பற்றத் தனித்தனி முனைந்துள்ளன. இப்படிப்பட்ட இவை ஒன்றாய்ச் சேருவது எக்காலம்? 101 அங்கத்தவர்கள் உடைய பாராளுமன்றத்திலே, இவர்கள் பெரும்பான்மையினர் ஆதரவைப் பெறுவது எப்போது? சுயேச்சைவாதிகளின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என இக்கட்சிகள் தனித்தனி நினைப்பது பைத்தியகாரத்தனம்.

இப்போதுள்ள அரசாங்கம் குறைந்த பட்சம் 60 அங்கத்தவர்களின் ஆதரவை எப்போதும் கொண்டிருக்கும் என்பது, பட்சபாதகமற்ற மனோநிலை படைத்த எவர்க்கும் இப்போது தெள்ளத் தெளிவாகப் புலனாகவேண்டும். ஆகவே, செனநாயக்கா அரசாங்கம் கவிழும் என்று எதிர்பார்த்தல் இலவுகாத்த கிளியின் கதியை அடைய ஏதுவாகும். அடுத்த 5 வருஷத்துக்கும் இந்த அரசாங்கம், இப்போதுள்ள நிலையில் நிலைக்கும்

இதற்கிடையில் தமிழ்க்காங்கிரஸவாதிகள், அரசாங்கம் செவ்வனே நடக்க, அரசாங்கத்துக்கு உதவிபுரியவேவேண்டும். இதனை அரசாங்கத்தில இருந்தால் என்ன, எதிர்க்கட்சியில் இருந்தென்ன செய்யலாம்.

இடதுசாரிகளின் துணையை தமிழ்க்காங்கிரஸ் நாடுவது வீண். இன்று இந்த இடதுசாரிகள் தமிழ்க்காங்கிரசின் உதவியை ஏன் நாடுகிறார்கள். ஏன் ஒத்துழைக்கிறார்கள்? அரசாங்கத்துக்குக் கரைச்சல் கொடுப்பதில் தமிழ்க்காங்கிரஸ் உதவியைப் பெறுவதற்குத்தான்.

இடதுசாரிகளுக்கு, எப்போதாவது அதிகாரமும் செல்வாக்கும் கிடைத்து, அரசாங்கம் நடத்தக்கூடிய சக்திவருமானால், அவர்கள் நிச்சயமாகத் தமிழ்க்காங்கிரஸின் உதவியைப் புறக்கணித்தே நடத்துவர். ஏன்? அவர்களுடைய கொள்கைப்படி, வகுப்புவாத ஸ்தாபனங்கள் அவர்களுக்கு நஞ்சு

---

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

நிகழும் சர்வசித்து வருஷம் கார்த்திகைமாதம் சகூ-ம் தேதி (4-12-47) வியாழக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை வழமைபோல் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

மு. ப. 10மணி தொடக்கம்
பி. ப. 2 மணிவரை:
  நீராவிபடி திலகவதியார் மடத்தில் கடவுள் ஆராதனை, தமிழ்மறைஓதல் மாகேசுர பூசை
அன்றிரவு ஆறரை மணிதொடக்கம்
  திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தலைமையில் விருதை, தண்தமிழ் செஞ்சொற் செல்வரும் முத்தமிழ்ப் புலவருமாகிய திரு. ச. கண்ணன் அடிகள் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் 'நாவலர் நாட்டிய நன்னெறி' என்னும் பொருள்பற்றி ஓர் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

**மு. மயில்வாகனம்**
காரியதரிசி
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை
1-12-47

---


# கிருஷ்ணன் றாது

**சருக்கவுரை**

வில்லிபாரதம்—உத்தியோக பருவத்துள்ளதாகிய கிருஷ்ணன் றூது சருக்கம், பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய பொழிப்புரை சரித்திரத்தொடர்பு, நூலாசிரியர்வரலாறு என்னுமிவற்றுடன் யாழ்ப்பாணம் நாவலர் கலாசாலைத் தலைமையாசிரியர் வித்துவான் ந. சுப்பையபிள்ளை யவர்கள் எழுதிய விசேடக் குறிப்புரையுஞ் சேர்த்து ஐந்தாம் பதிப்பாக அச்சிட்டு வெளிவந்துளது; இச்சருக்கத்திற்சிலபாகம் இப்பொழுதுதமிழ் ஆங்கில எஸ். எஸ். ஸீ பரீட்சைக்குப் பாடமாக விதிக்கப்பட்டுள்ளன

விலை 1 ரூபா 75 சதம் (ரூபா 1 அணு 12)

**மனேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை**
வண்ணார்பண்ணை :: யாழ்ப்பாணம்
20—10—47.


---

### மார்கழி மீ விசேஷ தினங்கள்

2-ந் உ (17-12-47) புதன் நல்லூர் கைலாசபிள்ளையார், கோப்பாய் கற்பகப்பிள்ளையார் நவாலி சிந்தாமணிப் பிள்ளையார், சண்டிருப்பாய் கல்வளை விநாயகர் வரணி கற்பகப்பிள்ளையார் திரு. பெரிய தொடுவாய் சித்திவிநாயகர் கயமுகாசுரசங்காரம்.
3-ந் உ (18-12-47) வியாழன் விநாயகசஷ்டி விரதம். கோப்பாய் கற்பகப்பிள்ளையார் அனந்தன் சாபநீக்க உற்சவம்.
4-ந் ,, (19-12-47) வெள்ளி உதயத்தின்முன் திருவெம்பாவை பூசை ஆரம்பம்.
7 ந் ,, (22-12-47) திங்கள் வாயிலார் நாயனர் குருபூசை.
9 ந் ,, (24 12-47) புதன் சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்.
10 ந் ,, (26-12-47) வியாழன் பிரதோஷ விரதம். கார்த்திகைவிரதம்
12 ந் ,, (28-12-47) சனி பூரணை விரதம்.
13 ந் ,, (29-12-47) ஞாயிறு நடேசர்ஆர்த்திராதரிசனம் வண். மேற்குகாட்டுத்துறை கருணாகரவைரவர்-பகவதி மாரியம்மன்கோவில் நடராசர் அபிஷேக உற்சவம், சடையநாயனர் குருபூசை.
14 ந் ,, (30 12-47) திங்கள் கெர்ப்போட்ட ஆரம்பம்.
18 ந் ,, (1-1-48) வியாழன் இயற்பகை நாயனர் குருபூசை 1948ம் ஆு பிறப்பு.
21 ந் ,, (5-1-48) திங்கள் மானக்கஞ்சாற நாயனர் குருபூசை.
24 ந் ,, 8-1-48) வியாழன் பிரதோஷ விரதம்.
26 ந் ,, (10-1 48) சனி அமாவாசை விரதம். சாக்கிய நாயனர் குருபூசை.
27 ந் ,, (11-1-48) ஞாயிறு கெர்ப்போட்ட முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச் செலவு எல்லாம் உட்பட, நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபா 130-க்கு எங்கள்மூலமாக பெற்றுக்கோள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக் கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ் செய்து திருப்தியடைந்துகொடுத்த நற்சாட்சிகள் அநேகமுண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,

252, காங்கேசன்துறை றோட், :: சிவன்கோவிலடி, யாழ்ப்பாணம்

தந்தி (Srivel) :: :: பிராஞ்சு: நாகபட்டணம்.

33 2—9—47&28-2-48

## பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல் கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப்பலம், உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

இல. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48

## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதிற் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்

-- வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறரு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

# 'தாயான ஈசன்'

1-ம் பக்கத் தொடர்ச்சி

வீங்க அடித்துவிட்டோமே! என்று பச்சாத்தாபப்படுவோம். குழந்தையையும் அப்பொழுதே மன்னித்துவிடுவோம்.

உயிர்களாகிய நாம் அவனை அறிந்து உய்வதற்காகக் கடவுள் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கிறார்; நமது அறியாமையை அகற்றி நாம் சிறந்த வழியில் ஒழுக வேண்டுமென்பதற்காகப் பெரியோர்கள் வாயிலாக உயர்ந்த நெறிகளையும் வகுத்திருக்கிறார். என்றாலும் நமது வாழ்க்கையில் நாம் செய்யும் பிழைகளும், குற்றங்களும் கணக்கற்றவை!

ஆர அமர உட்கார்ந்து நமது ஏடுகளைப் புரட்டினால் எத்தனை தவறுதல்கள்! எத்தனை வழுக்கல்கள்! செய்ய வேண்டியவைகள் பலப்பல செய்யப்படவில்லை. வேண்டாதவைகள் அநேகம் செய்யப்பட்டுள்ளன. ஒரு நிமிடம் உள்ளம் ஒரு முகப்பட்டு நிற்கவில்லை, மனப்பேயானது புலன்கள்வழியே காட்டிலும் மேட்டிலும் அலைந்து பற்றத்தகாதவைகளைப் பற்றிக்கொண்டு ஆடும் ஆட்டம் எடுத்துக் கூறும் தன்மையதல்ல. இவைகளையெல்லாம் நினைக்கும்போது இந்தப் பிழைகள் நிவிர்த்தியாவதெங்கே? நாம் மேனிலை அடைவதெங்கே என்று நடுக்கமுண்டாகிறது.

ஆயினும் அன்னையினும் தயவுடைய பெரியோன் யாது செய்கிறான்?

"பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை" என்றவாறு பெருந்தன்மையுடன் நாம் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்துக் கொள்வதுடன் மென்மேலும் நாம் முன்னேறுவதற்கு உள்நின்று ஊக்குகின்றான்.

தாயன்பானது தனது பிள்ளைகளின் சிறுசெயலையும் பெருமையபகக் கொள்ளுமாறு செய்கின்றது தனது பிள்ளையின் வேலையோ, கல்வியோ மிகவும் அற்பமாக இருந்தபோதிலும், தாய் 'என்பிள்ளை இந்த வேலையை அற்புதமாகச் செய்கிறான். படிப்பிலே மிகக் கெட்டிக்காரன்' என்றெல்லாம் சொல்லிப் பெருமிதமடைகிறாள்.

ஒருதாய்வயிற்றுபிள்ளைகளிலேயே எல்லாம் ஒன்றுபோ லிருப்பதில்லை சிலர் கெட்டிக்காராரகவும், சிலர்மட்டியாகவும் இருக்கலாம். தாய்கெட்டிக்காரக் குழந்தையை மெச்சிக்கொண்டு மேரழையை அசட்டை செய்வதில்லை. மட்டியாக இருக்கும் பிள்ளையைப்போற்றி மென்மேலும் உற்சாகமூட்டி அது திருந்துவதற்கு உதவி செய்வாள்.

இப்பேருலகிலே நாம் கற்றுள்ள கல்வியோ, ஈட்டும் பொருளோ, செய்யும் பணியோ மிகச் சிறிது; மிக மிக அற்பமானது. அறிஞர்களும் ஆன்றோர்களும் செய்த செயற்கரிய செயல்களோடு நமது பணியை ஒப்பிட்டுப் பார்த்தால், "சீ இவ்வளவுதானா!" என்று கருத்தழிய நேரிடும். "மற்றவர்கள் இதைப்பார்த்துச் சிரிக்கமாட்டார்களா" என்றுகூட எண்ணுவோம்.

அருளன்னையாகக் கூறப்படும் இறைவன் என்ன எண்ணுகிறான்? நம்பணி எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும் 'சீ இது அற்பம்'என்று கருதுகின்றானில்லை நமது சிறுபணிகளையும் இகழாது "சீயேதுமில்லாது என் செய்பணிகள் கொண்டருளும்" கருணையாளனாக விளங்குகிறான்.

சிறு குழந்தையானது கொஞ்ச நேரம பொம்மைகளை வைத்துக்கொண்டு தோழர்களோடு விளையாடுகிறது. ஆனால் தாயைக் கண்டவுடன் அவைகளையெல்லாம் எறிந்துவிட்டுத் தாயிடம் ஓடிவந்துவிடுகிறது. தாயின் மடியிலே அதுபெறும் ஆனந்தம் வேறொன்றிலும் பெறுவதில்லை.

ஒருவன் சொந்த ஊரைவிட்டு வேறு ஊரிலே மனைவி மக்களுடனே, மிகுந்த செல்வம் ஈட்டி மகிழ்வுடன் வாழ்கிறான். தாய், கிராமத்தில் ஒரு சிறு வீட்டில் தனியாக வசிக்கிறாள். அவன் எவ்வளவு சந்தோஷமாக வாழ்ந்தபோதிலும தாயினிடத்தில் வந்து இளமையின் சூழ்நிலையில் சில காலம் வசிப்பதில் ஏற்படும் ஆனந்தம் அலாதிதான்.

அதுபோலவே இறைவனைத் தாயாக வழிபடுவதில் தனி இன்பமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. உலக செல்வங்களை யெல்லாம்விட தாயாகிய இறைவனுடைய கருணையே உயிர்களுக்கு நிலையான இன்பமும் மன அமைதியும் கொடுக்க வல்லன.

ஆகவே, உருத்தெரியாக் காலத்தே மக்களின் உட்புகுந்து, தன்னைத் தானே அறிவித்து, இயல்பாகவுள்ள அறியாமையினால் உயிர்கள் செய்யும் பிழைகளைப் பொறுத்து, அவர்களின் சிறு பணிகளையும் அன்புடன் ஏற்றுக்கொண்டு பேரானந்தம் அளிக்கும் இறைவன் தாயினும் பெரிதும் தயவுடைய தாயாகிறான். ஆகவே கருணையே வடிவான அன்னையின் திருவடியாகிய தாமரையைச் சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்துகொண்டு அருள் தேனை உண்டு மகிழ் என்று மனமாகிய தும்பியை மாணிக்க வாசகர் வேண்டிக்கொள்கிறார்.

"நாயேனைத் தன்னடிகள்
  பாடுவித்த நாயகனை
பேயேனதுள்ளப் பிழை
  பொறுக்கும்பெருமையனை
சீயேது மில்லாதென்
  செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே
  சென்றூதாய் கோத்தும்பீ"

மேற்கூறிய கருத்துக்களை மனதில் வைத்துக்கொண்டு நாம் பாட்டை இரண்டு மூன்றுதரம் திரும்பத் திரும்பப் பாடினால் மனது தானாகவே தாயின் சேவடியில் மதுவுண்டு ரீங்காரம் செய்யும். நம்மாலான பணியை நாமும் செய்யவேண்டு மென்ற ஆவல் எழும்.

— சித்தாந்தம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna. on Tuesday. December 2. 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org